रेलवे भर्ती बोर्ड | RAILWAY RECRUITMENT BOARD
सीईएन ०१/२०२६ सहायक लोको पायलट (एएलपी) के पद पर भर्ती
CEN 01/2026 Recruitment of Assistant Loco Pilot (ALP)

Test Date	04/11/2026
Test Time	12:30 PM - 1:30 PM
Subject	RRB ALP 2026 CBT 1

*** Note**
Correct Answer will carry 1 mark per Question.
Incorrect Answer will carry 1/3 Negative mark per Question.

1. Options shown in green color with a tick icon are correct.
2. Chosen option on the right of the question indicates the option selected by the candidate.

Section : **RRB ALP**

Q.1 கொடுக்கப்பட்ட தொடரில், '?' க்கு பதிலாக என்ன வர வேண்டும்?

6 10 18 34 66 ?

Ans
✗ A. 134
✓ B. 130
✗ C. 133
✗ D. 128

Q.2 ஒரு பள்ளியின் வருகைப்பதிவு டேஷ்போர்டு தொடர்ந்து ஐந்து நாட்களுக்கான வருகையைப் பதிவு செய்கிறது. நான்கு நாட்களில் வந்த மாணவர்களின் வருகை 48, 50, 47 மற்றும் 53 ஆகும். ஐந்து நாட்களின் சராசரி வருகை 50 மாணவர்கள் என்று தகவல் பலகை காட்டினால், ஐந்தாவது நாளில் வருகை தந்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

Ans
✗ A. 54
✗ B. 50
✓ C. 52
✗ D. 51

Q.3 இந்த கேள்வி பின்வரும் வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டது.

ART LOW CRY FLU

மேற்கண்ட ஒவ்வொரு வார்த்தையிலும், ஒவ்வொரு உயிரெழுத்தும், ஆங்கில அகர வரிசையின்படி, அதற்கு உடனடி அடுத்து வரும் எழுத்தாகவும், மற்றும் ஒவ்வொரு மெய்யெழுத்தும், ஆங்கில அகர வரிசையின்படி, அதற்கு உடனடி முன்பாக வரும் எழுத்தாகவும் மாற்றப்படுகின்றன. எனில், இவ்வாறு உருவாக்கப்பட்ட எத்தனை எழுத்து-தொகுப்புகளில் எந்த உயிரெழுத்தும் தோன்றாது?

Ans
✗ A. ஒன்று
✗ B. இரண்டு
✓ C. மூன்று
✗ D. நான்கு

Q.4 இந்த கேள்வியில், ஒரு கேள்வியைத் தொடர்ந்து (I) மற்றும் (II) என எண்ணிடப்பட்ட இரண்டு கூற்றுகள் கொடுக்கப்பட்டுள்ளன. கூற்றுகளில் கொடுக்கப்பட்டுள்ள தரவுகள் கேள்விக்கு பதிலளிக்க, போதுமானவையா என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும். இரண்டு கூற்றுகளையும் படித்து, பொருத்தமான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்.

Q. கௌதம், ஹிரல், இவான், ஜிவிகா மற்றும் கேசவ் ஆகிய ஐந்து நபர்கள் ஒரு வரிசையில் நிற்கிறார்கள். அவர்களில் கடைசியாக நிற்பவர் யார்?

(I) ஹிரல் என்பவர் இவானுக்குப் பின்னால், ஆனால் கௌதமுக்கு முன்னால் இருக்கிறார்.
(II) கௌதமுக்கு பின்னால் ஜீவிகாவும், மற்றும் ஜீவிகாவிற்கு பின்னால் கேசவ்-வும் இருக்கிறார்கள்.

Ans

✗ A. கூற்று I-இல் உள்ள தரவு மட்டுமே கேள்விக்குப் பதிலளிக்க போதுமானது, அதே நேரத்தில் கூற்று II-இல் உள்ள தரவு பதிலளிக்க போதுமானதல்ல

✓ B. கூற்றுகள் I மற்றும் II ஆகிய இரண்டும் ஒன்றாக சேர்ந்து (கூற்று I மட்டும் அல்லது கூற்று II மட்டும் தனியாக அல்ல) கேள்விக்குப் பதிலளிக்க போதுமானவை

✗ C. கூற்றுகள் I மற்றும் II ஆகிய இரண்டும் ஒன்றாக சேர்ந்தும் கேள்விக்குப் பதிலளிக்க போதுமானவை அல்ல

✗ D. கூற்று II-இல் உள்ள தரவு மட்டுமே கேள்விக்குப் பதிலளிக்க போதுமானது, அதே நேரத்தில் கூற்று I-இல் உள்ள தரவு பதிலளிக்க போதுமானதல்ல

Q.5 இக்கேள்வியில், ஒரு கேள்வியும் அதைத் தொடர்ந்து (I) மற்றும் (II) என எண்ணிடப்பட்ட இரண்டு கூற்றுகளும் கொடுக்கப்பட்டுள்ளன. அக்கூற்றுகளில் வழங்கப்பட்ட தகவல்கள் அக்கேள்விக்கு விடையளிக்கப் போதுமானவையா என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும். இரு கூற்றுகளையும் படித்துப் பார்த்து, சரியான விடையைத் தீர்மானிக்கவும்.
A, W, V, G மற்றும் E ஆகிய வெவ்வேறு உயரங்களைக் கொண்ட 5 கம்பங்களில், எந்தக் கம்பம் மிகக் குறைவான உயரத்தைக் கொண்டது?
(I) G கம்பம் ஆனது ஒரே ஒரு கம்பத்தை விட மட்டுமே அதிக உயரம் கொண்டது. A கம்பம் ஆனது W ஐ விட அதிக உயரம் கொண்டதாகும்.
(II) G கம்பம் ஆனது E ஐ விட அதிக உயரம் கொண்டதாகும்.

Ans

✓ A. கூற்றுகள் I மற்றும் II ஆகிய இரண்டிலும் உள்ள தரவுகள் ஒன்றாக சேர்ந்து (கூற்று I மட்டும் அல்லது கூற்று II மட்டும் தனியாக அல்ல) கேள்விக்குப் பதிலளிக்க போதுமானவை

✗ B. கூற்றுகள் I மற்றும் II ஆகிய இரண்டிலும் உள்ள தரவுகள் ஒன்றாக சேர்ந்து கேள்விக்குப் பதிலளிக்க போதுமானவை அல்ல

✗ C. கூற்று II இல் உள்ள தரவு மட்டுமே கேள்விக்குப் பதிலளிக்க போதுமானது, அதே நேரத்தில் கூற்று I இல் உள்ள தரவு பதிலளிக்க போதுமானதல்ல

✗ D. கூற்று I இல் உள்ள தரவு மட்டுமே கேள்விக்குப் பதிலளிக்க போதுமானது, அதே நேரத்தில் கூற்று II இல் உள்ள தரவு பதிலளிக்க போதுமானதல்ல

Q.6 சுருக்குக: $(17pq + 16q)^2 - (17pq - 16q)^2$.

Ans

✗ A. $544p^2q^2$

✗ B. $1088p^2q$

✓ C. $1088pq^2$

✗ D. $544pq^2$

Q.7 + என்றால் -, - என்றால் ×, × என்றால் ÷, ÷ என்றால் + ஐக் குறிக்கிறது. எனில், பின்வரும் சமன்பாட்டில் கேள்விக்குறிக்கு (?) பதிலாக என்ன வரும்?

86 - 13 ÷ 127 + 684 × 12 = ?

Ans

✗ A. 1122

✗ B. 1169

✓ C. 1188

✗ D. 1135

Q.8 அரவிந்த் புள்ளி A இல் தொடங்கி, வடக்கு நோக்கி 9 km ஓட்டுகிறார். பின்னர் அவர் வலதுபுறம் திரும்பி, 13 km ஓட்டி, வலதுபுறம் திரும்பி, 11 km ஓட்டுகிறார். பின்னர் அவர் வலதுபுறம் திரும்பி, 18 km ஓட்டுகிறார். அவர் இறுதியாக வலதுபுறம் திரும்பி, 2 km ஓட்டி, புள்ளி P இல் நிறுத்துகிறார். மீண்டும் புள்ளி A ஐ அடைய அவர் எவ்வளவு தூரம் (மிகக்குறுகிய தூரம்) மற்றும் எந்த திசையை நோக்கி ஓட்டிச் செல்ல வேண்டும்? (குறிப்பிடப்படாவிட்டால் அனைத்து திருப்பங்களும் 90-டிகிரி திருப்பங்கள் மட்டுமே.)

Ans
- ✗ A. 4 km மேற்கு நோக்கி
- ✓ B. 5 km கிழக்கு நோக்கி
- ✗ C. 5 km மேற்கு நோக்கி
- ✗ D. 4 km கிழக்கு நோக்கி

Q.9 பின்வருவனவற்றை சுருக்கவும்:

$(6561)^{0.18} \times (6561)^{0.07}$

Ans
- ✓ A. 9
- ✗ B. 4
- ✗ C. 5
- ✗ D. 6

Q.10 S, T, U, V, மற்றும் W ஆகியோர் ஒரு வட்ட மேசையைச் சுற்றி அதன் மையத்தை நோக்கி அமர்ந்துள்ளனர். U என்பவர் S இன் உடனடி வலதுபுறத்தில் அமர்ந்துள்ளார். V என்பவர் U இன் இடதுபுறத்தில் இரண்டாவதாக அமர்ந்துள்ளார். W என்பவர் V இன் உடனடி அருகாமையாளர் அல்ல. W இன் உடனடி இடதுபுறத்தில் அமர்ந்திருப்பவர் யார்?

Ans
- ✓ A. U
- ✗ B. T
- ✗ C. S
- ✗ D. V

Q.11 ஒரு கடை X மற்றும் Y ஆகிய இரண்டு வகையான டிஜிட்டல் ஸ்டோரேஜ் சாதனங்களை 3: 8 என்ற விகிதத்தில் கையிருப்பில் வைத்துள்ளது. அவற்றில் 24 சாதனங்கள் X வகையைச் சேர்ந்தவை. எனில், Y வகைச் சாதனங்களின் எண்ணிக்கை X வகைச் சாதனங்களின் எண்ணிக்கையை விட எவ்வளவு அதிகமாக உள்ளது?

Ans
- ✓ A. 40
- ✗ B. 64
- ✗ C. 32
- ✗ D. 48

Q.12 A, B, C, D மற்றும் E ஆகியோர் வெவ்வேறு வயதுடையவர்கள் ஆவர். C என்பவர் D மற்றும் E ஆகியோரை விட மட்டுமே இளையவர். A என்பவர் B-ஐ விட மூத்தவர், ஆனால், C-ஐ விட இளையவர். எனில் அவர்களில் மிக இளையவர் யார்?

Ans
- ✗ A. C
- ✗ B. D
- ✓ C. B
- ✗ D. A

Q.13 ஒரு தனிமத்தின் இணைதிறனை பின்வரும் எந்தக் கூற்று சிறப்பாக விவரிக்கிறது?

Ans

✔ A. இது இழக்கப்பட்ட, பெறப்பட்ட அல்லது பகிரப்பட்ட எலக்ட்ரான்களின் அடிப்படையிலான பிணைப்புத் திறன் ஆகும்

✘ B. இது ஒரு அணுவில் உள்ள நியூட்ரான்கள் மற்றும் புரோட்டான்களின் எண்ணிக்கைக்கு இடையே உள்ள வேறுபாடு ஆகும்

✘ C. இது ஒரு அணுவின் அணுக்கருவில் உள்ள புரோட்டான்களின் மொத்த எண்ணிக்கை ஆகும்

✘ D. இது அணுக்கருவில் உள்ள நியூக்ளியான்களின் மொத்த எண்ணிக்கை ஆகும்

Q.14 REFLIMS என்ற வார்த்தையில் உள்ள ஒவ்வொரு உயிரெழுத்தும் ஆங்கில அகர வரிசைப்படி உடனடியாக அதைத் தொடர்ந்து வரும் எழுத்தாக மாற்றப்படுகிறது, மற்றும் ஒவ்வொரு மெய்யெழுத்தும் ஆங்கில அகர வரிசைப்படி அதற்கு உடனடி முன்பாக வரும் எழுத்தாக மாற்றப்படுகிறது. இவ்வாறு உருவாக்கப்பட்ட புதிய எழுத்துக்களின் குழுவில் எத்தனை எழுத்துக்கள் சரியாக இரண்டு முறை தோன்றும்?

Ans

✔ A. 0

✘ B. 2

✘ C. 1

✘ D. 3

Q.15 ஒரு பிரீமியம் ஹெட்போன்-ஆனது, அதன் குறிக்கப்பட்ட விலையில் முறையே 15% மற்றும் 10% என்ற தொடர் தள்ளுபடிகளுக்குப் பிறகு, ₹15,300 க்கு கிடைத்தது. எனில், அதன் குறிக்கப்பட்ட விலை (₹ இல்) என்னவாக இருந்திருக்கும்?

Ans

✔ A. 20,000

✘ B. 18,000

✘ C. 21,000

✘ D. 19,500

Q.16 பின்வரும் சுரப்பிகளின் ஜோடிகளில் எது, விந்துசெல்களுக்கு ஊட்டமளித்து அவை சுறுசுறுப்பாக இருக்க உதவும் திரவங்களைச் சுரக்கிறது?

Ans

✘ A. விந்தகம் மற்றும் விதைப்பை

✘ B. விந்து நாளம் மற்றும் சிறுநீர் வெளியேற்றுக்குழாய்

✘ C. விதைப்பை மற்றும் சிறுநீர் வடிகுழல்

✔ D. செமினல் வெசிகல்ஸ் மற்றும் புரோஸ்டேட் சுரப்பி

Q.17 ஒரு குறிப்பிட்ட தர்க்கத்தைப் பின்பற்றி, 21 என்பது 147 உடன் தொடர்புடையது. அதே தர்க்கத்தைப் பின்பற்றி, 25 என்பது 175 உடன் தொடர்புடையது. அதே தர்க்கத்தைப் பின்பற்றி, பின்வருவனவற்றில் 33 என்பது எதனுடன் தொடர்புடையது?
(குறிப்பு: எண்களை அதன் கூறு (constituent) இலக்கங்களாகப் பிரிக்காமல், முழு எண்களில் செயல்பாடுகள் செய்யப்பட வேண்டும். எ.கா. 13. 13 -இல் கூட்டல் / கழித்தல் / பெருக்கல் போன்ற செயல்பாடுகளைச் செய்யலாம். 13 ஐ 1 மற்றும் 3 ஆக பிரித்த பின்னர் 1 மற்றும் 3 இல் கணித செயல்பாடுகளைச் செய்வது அனுமதிக்கப்படாது)

Ans

✘ A. 221

✘ B. 241

✘ C. 251

✔ D. 231

Q.18 சமன்பாட்டை நிறைவு செய்யும் M-இன் மதிப்பைக் கண்டறியவும்:

$$\left(\frac{11}{3}\right)^{3} \times \left(\frac{3}{11}\right)^{13} \times \left(\frac{11}{3}\right)^{6} = \left(\frac{3}{11}\right)^{3m+11}$$

Ans

✗ A. $-\frac{5}{3}$

✗ B. $\frac{5}{3}$

✗ C. $\frac{7}{3}$

✓ D. $-\frac{7}{3}$

Q.19 இந்த கேள்வியில், எண்கள் மற்றும் சின்னங்களின் குழு கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் மற்றும் பின்வரும் நிபந்தனைகளின்படி எழுத்துக் குறியீடுகளைப் பயன்படுத்தி குறியிடப்படுகிறது .நிபந்தனைகளைப் பின்பற்றி வரும் குறியீடுகளின் சரியான சேர்க்கையே உங்களுடைய பதிலாகும் . நிபந்தனைகள் ஏதும் பொருந்தவில்லை எனில், அட்டவணையில் நேரடியாகக் கொடுக்கப்பட்டுள்ளவாறு அந்தந்த எண்/குறியீட்டிற்கான குறியீடுகளை அப்படியே பின்பற்ற வேண்டும்.

எண்/சின்னம் ! * 3 # @ % 8 6 $?

குறியீடு A E B D L Z T Q J I

நிபந்தனைகள்:
i. முதல் உறுப்பு ஒரு சின்னமாகவும், கடைசி உறுப்பு ஓர் எண்ணாகவும் இருந்தால், முதல் மற்றும் கடைசி உறுப்புகளின் குறியீடுகளானது ஒன்றுக்கொன்று பரிமாற்றப்பட வேண்டும்.
ii. இரண்டாவது மற்றும் மூன்றாவது உறுப்புகள் ஒற்றைப்படை எண்களாக இருந்தால், மூன்றாவது உறுப்பிற்கான குறியீடானது இரண்டாவது உறுப்பின் குறியீடைக் கொண்டிருக்க வேண்டும்
iii. நான்காவது உறுப்பு ஒரு சின்னமாகவும், ஐந்தாவது உறுப்பு ஓர் எண்ணாகவும் இருந்தால், இரண்டு உறுப்புகளையும் © எனக் குறியிடவும்.

பின்வரும் எண்-குறியீட்டுக் குழுவிற்கான குறியீடு என்ன?
! * 3 # @

Ans

✓ A. AEBDL

✗ B. LEBDL

✗ C. AEQDL

✗ D. ZEBDL

Q.20 ஒரு திரைப்படம் இரண்டு குழுக்களைச் சேர்ந்த பார்வையாளர்களிடமிருந்து மதிப்பீடுகளைப் பெற்றது. நாற்பது பார்வையாளர்கள் சராசரியாக 8 புள்ளிகள் மதிப்பீட்டையும், அறுபது பார்வையாளர்கள் சராசரியாக 7 புள்ளிகள் மதிப்பீட்டையும் வழங்கினர் எனில், ஒட்டுமொத்த சராசரி மதிப்பீடு என்ன?

Ans

✓ A. 7.4

✗ B. 7.6

✗ C. 7.2

✗ D. 7.5

Q.21 நெஃப்ரானில் தேர்ந்தெடுக்கப்பட்ட மறுஉறிஞ்சுதல் செயல்படுவதை நிறுத்திவிட்டால், பின்வருவனவற்றில் எது நிகழ்வதற்கு சாத்தியமாகும்?

Ans

✗ A. உடலில் அதிகப்படியான கழிவுகள் சேமிக்கப்படும்

✗ B. வடிகட்டுதல் செயல்பாடு முற்றிலும் நின்றுவிடும்

✗ C. சிறுநீர் திடமாக மாறும்

✓ D. அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் சிறுநீர் வழியாக இழக்கப்படும்

blackbook

Q.22 ஒரு பள்ளியில், வகுப்பு X ஆனது A, B மற்றும் C மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. பிரிவுகள் A மற்றும் B இல் மாணவர்களின் விகிதம் 1 : 3 ஆகும், மற்றும் பிரிவுகள் B மற்றும் C இல் மாணவர்களின் விகிதம் 4 : 5 ஆகும். வகுப்பு X இல் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 341 எனில், பிரிவு A இல் எத்தனை மாணவர்கள் உள்ளனர்?

Ans
✗ A. 46
✗ B. 42
✗ C. 40
✓ D. 44

Q.23 இந்த கேள்வி பின்வரும் வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டது.
DEN GOD WAR BOA
மேற்கண்ட ஒவ்வொரு வார்த்தையிலும் உள்ள ஒவ்வொரு உயிரெழுத்தும், ஆங்கில அகர வரிசைப்படி, அதற்கு உடனடி அடுத்து வரும் எழுத்தாகவும், மற்றும் ஒவ்வொரு மெய்யெழுத்தும், ஆங்கில அகர வரிசைப்படி, அதற்கு உடனடி முன்பாக வரும் எழுத்தாகவும் மாற்றப்படுகிறது. இவ்வாறு உருவாக்கப்படும் எழுத்துத் தொகுப்புகளில், எத்தனை தொகுப்புகளில் உயிரெழுத்து எதுவும் இடம்பெறாது?

Ans
✗ A. இரண்டு
✓ B. மூன்று
✗ C. நான்கு
✗ D. ஒன்று

Q.24 இந்தக் கேள்வியில், கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் மற்றும் அதன்பின் வரும் நிபந்தனைகளின்படி, எழுத்துக் குறியீடுகளைப் பயன்படுத்தி எண்கள்/சின்னங்களின் ஒரு குழுவானது குறியிடப்பட்டுள்ளது. நிபந்தனைகளைப் பின்பற்றும் சரியான குறியீடுகளின் தொகுப்பே உங்கள் விடையாகும். எந்த நிபந்தனையும் பின்பற்றப்படவில்லையெனில், அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளபடி அந்தந்த எண்/சின்னங்களுக்கான குறியீடுகளை நேரடியாகப் பின்பற்ற வேண்டும்.

எண்/சின்னம் 8 6 % 5 # ! & 9 3 ?

குறியீடு Y A V J P Q N X K I

நிபந்தனைகள் –
(i) முதல் உறுப்பு ஒரு சின்னமாகவும் மற்றும் கடைசி உறுப்பு ஒரு எண்ணாகவும் இருந்தால், அவற்றின் குறியீடுகளை ஒன்றுக்கொன்று பரிமாற்றவும்.
(ii) இரண்டாவது மற்றும் மூன்றாவது உறுப்புகள் ஒற்றைப்படை எண்களாக இருந்தால், மூன்றாவது உறுப்பை இரண்டாவது உறுப்பின் குறியீட்டைக் கொண்டு குறிக்கவும்.
(iii) நான்காவது உறுப்பு ஒரு சின்னமாகவும் மற்றும் ஐந்தாவது உறுப்பு ஒரு எண்ணாகவும் இருந்தால், இரண்டையும் © என குறியிடவும்.

பின்வரும் குழுவிற்கான குறியீடு என்னவாக இருக்கும்?
8 6 % 5 #

Ans
✗ A. PAVJP
✓ B. YAVJP
✗ C. YAVJZ
✗ D. YANJP

Q.25 ஆங்கில அகரவரிசையின் அடிப்படையில், பின்வரும் நான்கு எழுத்து-தொகுப்புகளில் மூன்று ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் ஒரே மாதிரியாக அமைந்து, இதனால் அவை ஒரு குழுவை உருவாக்குகின்றன. எந்த ஒன்றானது அந்தக் குழுவில் சேராதது ஆகும்?
(குறிப்பு: மாறுபட்ட ஒன்றானது எழுத்து-தொகுப்பில் உள்ள மெய்யெழுத்துக்கள்/உயிரெழுத்துகளின் எண்ணிக்கை அல்லது அவற்றின் நிலை ஆகியவற்றின் அடிப்படையில் இல்லை.)

Ans
✓ A. GNQT
✗ B. UAEH
✗ C. RXBE
✗ D. VBFI

blackbook

Q.26 ஒரு கார் ஓய்வு நிலையிலிருந்து சீரான வீதத்தில் முடுக்கமடைகிறது. 5 வினாடிகளுக்குப் பிறகு, அதன் திசைவேகம் 20 m/s ஆகும். இயக்கத்தின் வரைகலைப் பிரதிநிதித்துவத்தைப் பயன்படுத்தி, அந்த 5 வினாடிகளில் கடந்த தொலைவைக் கண்டறிய நீங்கள் எந்தச் சமன்பாட்டைப் பயன்படுத்துவீர்கள், மேலும் அதன் முடிவு என்ன?

Ans

✗ A. p = mv ஐப் பயன்படுத்தவும், எனவே தூரம் = 25 m

✗ B. v = u + at ஐப் பயன்படுத்தவும், எனவே தூரம் = 20 m

✗ C. F = ma ஐப் பயன்படுத்தவும், எனவே தூரம் = 100 m

✓ D. $s = ut + 1/2\ at^2$ ஐப் பயன்படுத்தவும், எனவே தூரம் = 50 m

Q.27 ரோஷன் 25 km/h வேகத்தில் புள்ளி A இலிருந்து துவங்கி புள்ளி B வரை ஓடுகிறார் மற்றும் புள்ளி B இலிருந்து புள்ளி A க்கு 31 km/h இல் திரும்புகிறார். முழு பயணத்தின் சராசரி வேகத்தைக் கண்டறியவும் (இரண்டு தசம இடங்களுக்கு முழுமையக்கவும்).

Ans

✗ A. 27.84 km/h

✗ B. 27.49 km/h

✗ C. 27.32 km/h

✓ D. 27.68 km/h

Q.28 கொடுக்கப்பட்ட இத்தொடரில், '?' க்கு பதிலாக என்ன வர வேண்டும்?
162 153 143 134 124 115 ?

Ans

✗ A. 108

✓ B. 105

✗ C. 103

✗ D. 112

Q.29 ஒரு குறிப்பிட்ட தொகையானது ஆண்டுக்கு 12% வீத வருடாந்திர கூட்டுவட்டி முறையில் முதலீடு செய்யப்படுகிறது. 2 ஆண்டுகளுக்குப் பிறகு அந்தத் தொகை ₹25,088 ஆக அதிகரித்தால், முதலீடு செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

Ans

✗ A. ₹19,000

✓ B. ₹20,000

✗ C. ₹21,000

✗ D. ₹22,000

Q.30 ஒரு பரிசோதனையின் போது, ஒரு மாணவர் நெம்புகோலின் சுமை ஆர்மை (lever's load arm), எப்பொழுதும் விசை செலுத்தப்படும் பகுதியாகத் தவறாக அடையாளம் காண்கிறார். இந்தத் தவறான புரிதலை மிகச்சரியாகத் திருத்தும் கருத்து எது?

Ans

✗ A. அடிப்பகுதி என்பது விசையின் திசையாகும்

✓ B. திறன் ஆர்ம் (effort arm) என்பது விசை செலுத்தப்படும் பகுதியாகும்

✗ C. ஆதாரப்புள்ளி என்பது விசை செலுத்தப்படும் புள்ளியாகும்

✗ D. சுமை ஆர்ம் ஆதாரப் புள்ளியைத் தாங்குகிறது

Q.31 ஒரு குறிப்பிட்ட குறியீட்டு மொழியில், 'UHRD' என்பது '57' என்றும் 'SALM' என்பது '63' என்றும் குறியிடப்பட்டுள்ளது. எனில், கொடுக்கப்பட்ட குறியீட்டு மொழியில், 'YFCP' க்கான குறியீடு என்ன?

Ans

✗ A. 52

✗ B. 55

✓ C. 58

✗ D. 61

blackbook

Q.32 வினோத் புள்ளி A இலிருந்து தொடங்கி கிழக்கு நோக்கி 7 km ஓட்டுகிறார். பின்னர் அவர் இடதுபுறம் திரும்பி, 9 km ஓட்டி, இடதுபுறம் திரும்பி, 3 km ஓட்டுகிறார். பின்னர் அவர் இடதுபுறம் திரும்பி, 15 km ஓட்டுகிறார். பின்னர் இடதுபுறம் திரும்பி, 5 km ஓட்டுகிறார். பின்னர் அவர் வலதுபுறம் திரும்பி, 4 km ஓட்டுகிறார். அவர் இறுதியாக வலதுபுறம் திரும்பி, 9 km ஓட்டி, புள்ளி P-ல் நிறுத்துகிறார். மீண்டும் புள்ளி A-ஐ அடைய அவர் எவ்வளவு தூரம் (மிகக்குறைந்த தூரம்) மற்றும் எந்த திசையை நோக்கி ஓட்டி செல்ல வேண்டும்? (குறிப்பிடப்படாவிட்டால் அனைத்து திருப்பங்களும் 90 டிகிரி திருப்பங்கள் மட்டுமே)

Ans
- ✗ A. 9km வடக்கு
- ✓ B. 10km வடக்கு
- ✗ C. 11km வடக்கு
- ✗ D. 12km வடக்கு

Q.33 கீழே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு ஜோடிகள் பின்பற்றும் அதே அமைப்பைப் பின்பற்றும் ஜோடியைத் தேர்ந்தெடுக்கவும். இரண்டு ஜோடிகளும் ஒரே மாதிரியான அமைப்பைப் பின்பற்றுகின்றன.

TRT–WUW
IGI–LJL

Ans
- ✗ A. DAB–FDF
- ✗ B. DAB–GEG
- ✗ C. DBD–FEF
- ✓ D. DBD–GEG

Q.34 பின்வரும் எழுத்துத் தொடரைப் பார்த்து, கேள்விக்கு விடையளிக்கவும்.
(இடது) **W Z L V B R O F V Y N K H V N T G B J D C Y Z Q D X** (வலது)
கொடுக்கப்பட்டுள்ள தொடரில், இடது முனையிலிருந்து மூன்றாவது எழுத்திற்கும் வலது முனையிலிருந்து மூன்றாவது எழுத்திற்கும் இடையே ஆங்கில அகர வரிசையின் படி எத்தனை எழுத்துகள் உள்ளன?

Ans
- ✗ A. மூன்று
- ✓ B. நான்கு
- ✗ C. ஆறு
- ✗ D. ஐந்து

Q.35 கீழே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு தொகுப்பு ஜோடிகள் பின்பற்றும் அதே அமைப்பைப் பின்பற்றும் ஜோடியைத் தேர்ந்தெடுக்கவும். இரண்டு ஜோடிகளும் ஒரே மாதிரியான அமைப்பைப் பின்பற்றுகின்றன.

OAT : QWV
SSX : UOZ

Ans
- ✗ A. LWK : PUO
- ✗ B. TKY : WGB
- ✗ C. UST : WPV
- ✓ D. WKB : YGD

Q.36 சுருக்குக:

$$\left(\frac{9x^2-68xy+64y^2}{3x-8y}-3x+8y+\frac{10xy}{3x-8y}\right)\left(\frac{64y^2-9x^2}{3x+8y}\right)$$

Ans
- ✗ A. −10xy
- ✗ B. 3x − 8y
- ✗ C. 3x + 8y
- ✓ D. 10xy

Q.37 Ai, Bf, Cx, Dj, Ey, Fu மற்றும் Gt ஆகியோர் ஒரு வட்ட மேசையைச் சுற்றி அதன் மையத்தை நோக்கி அமர்ந்துள்ளனர். Bf என்பவர் Cx இன் வலதுபுறத்தில் இரண்டாவதாக அமர்ந்துள்ளார். Gt என்பவர் Cx இன் இடதுபுறத்தில் இரண்டாவதாக அமர்ந்துள்ளார். Dj என்பவர் Ai இன் உடனடி இடதுபுறத்தில் அமர்ந்துள்ளார். Ey என்பவர் Fu இன் வலதுபுறத்தில் இரண்டாவதாக அமர்ந்துள்ளார். Ey இன் இடதுபுறத்தில் இருந்து எண்ணும் போது Ey மற்றும் Gt க்கு இடையில் எத்தனை நபர்கள் அமர்ந்துள்ளனர்?

Ans
- ✗ A. நான்கு
- ✗ B. மூன்று
- ✓ C. இரண்டு
- ✗ D. ஒன்று

Q.38 'A' என்பது '÷' என்பதைக் குறிக்கிறது, 'B' என்பது '×' என்பதைக் குறிக்கிறது, 'C' என்பது '+' என்பதைக் குறிக்கிறது, மற்றும் 'D' என்பது '−' என்பதையும் குறித்தால், பின்வரும் சமன்பாட்டில் கேள்விக்குறி '?' உள்ள இடத்தில் என்ன வரும்?

29 D 28 A 11 B 44 C 41 = ?

Ans
- ✓ A. −42
- ✗ B. −40
- ✗ C. −41
- ✗ D. −44

Q.39 'A' என்பது '÷', 'B' என்பது '×', 'C' என்பது '+' மற்றும் 'D' என்பது '−' எனில், பின்வரும் சமன்பாட்டில் கேள்விக்குறியின் (?) இடத்தில் என்ன வரும்?

2 B 1 D 6 A 2 C 3 = ?

Ans
- ✗ A. 5
- ✓ B. 2
- ✗ C. 7
- ✗ D. 8

Q.40 ஒரு கடைக்காரர், தலா ஒரு டஜனுக்கு ₹168 என்ற விலையில் 78 டஜன் பொருட்களை, வாங்குகிறார். அவர் ஒவ்வொரு பொருளையும் ₹35க்கு விற்கிறார் எனில், அவரது லாப சதவீதம் எவ்வளவு ஆகும்?

Ans
- ✓ A. 150%
- ✗ B. 160%
- ✗ C. 140%
- ✗ D. 130%

Q.41 C, D, E, F, K, L மற்றும் M ஆகிய ஏழு பெட்டிகள் ஒன்றன் மேல் ஒன்றாக வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அதே வரிசையில் இருக்க வேண்டிய அவசியமில்லை. F பெட்டி கீழே இருந்து இரண்டாவதாக வைக்கப்படுகிறது. F மற்றும் C பெட்டிகளுக்கு இடையே மூன்று பெட்டிகள் மட்டுமே வைக்கப்பட்டுள்ளன. M பெட்டி ஆனது F க்கு கீழே ஏதோ ஒரு நிலையில் வைக்கப்படுள்ளது. C மற்றும் D பெட்டிகளுக்கு இடையில் E பெட்டி மட்டுமே வைக்கப்படுகிறது. K பெட்டி ஆனது C பெட்டிக்கு மேலே உள்ள ஏதோ ஒரு நிலையில் வைக்கப்படுகிறது. L மற்றும் C பெட்டிகளுக்கு இடையில் எத்தனை பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன?

Ans
- ✗ A. நான்கு
- ✗ B. ஒன்று
- ✗ C. மூன்று
- ✓ D. இரண்டு

Q.42 A, B, E, F, G, H மற்றும் I ஆகிய ஒவ்வொருவருக்கும் திங்கட்கிழமை தொடங்கி ஞாயிற்றுக்கிழமையில் முடியும் வகையில் வாரத்தின் வெவ்வேறு நாட்களில் தேர்வு உள்ளது. E என்பவருக்கு சனிக்கிழமையன்று தேர்வு உள்ளது. H என்பவருக்கு A க்கு முந்தைய நாளிலேயே தேர்வு உள்ளது. B என்பவருக்கு F க்கு தேர்வு இருக்கும் நாளுக்கு அடுத்த நாட்களில் ஏதேனும் ஒரு நாளில் தேர்வு உள்ளது. I என்பவருக்கு A க்கு தேர்வு இருக்கும் நாளுக்கு உடனடி அடுத்த நாளிலேயே தேர்வு உள்ளது. E மற்றும் G க்கு இடையே ஒரே ஒருவருக்கு மட்டுமே தேர்வு உள்ளது. A மற்றும் B க்கு இடையே எத்தனை நபர்களுக்கு தேர்வு உள்ளது?

Ans

✔ A. நான்கு

✘ B. மூன்று

✘ C. ஒன்று

✘ D. இரண்டு

Q.43 ஒரு நபர் ₹56,500 என்னும் தொகையை ஆண்டுக்கு 8% என்னும் தனிவட்டி விகிதத்தில் 3 ஆண்டுகளுக்கு முதலீடு செய்துள்ளார். 3 ஆண்டுகளுக்குப் பிறகு அவருக்குக் கிடைக்கும் தொகையைக் (₹-இல்) கண்டறியவும்.

Ans

✘ A. 69,060

✘ B. 69,600

✘ C. 70,600

✔ D. 70,060

Q.44 கொடுக்கப்பட்ட தொடரில், '?' க்கு பதிலாக என்ன வர வேண்டும்?
62 73 95 139 227 ?

Ans

✘ A. 401

✘ B. 407

✔ C. 403

✘ D. 408

Q.45 AB மற்றும் CD என்பன இரண்டு இணைக்கோடுகள் ஆகும். EF என்னும் இன்னொரு கோடானது, இந்த இணைக்கோடுகளை முறையே M மற்றும் N ஆகிய புள்ளிகளில் வெட்டுகிறது. BMN மற்றும் MND ஆகிய கோணங்களின் இருசமவெட்டிகள் P என்னும் புள்ளியில் சந்திக்கின்றன எனில், பின்வரும் கூற்றுகளில் எது உண்மையானது ஆகும்?

Ans

✘ A. MNP என்பது N இல் செங்கோணத்தைக் கொண்டுள்ள ஒரு செங்கோண முக்கோணம் ஆகும்.

✔ B. MNP என்பது P இல் செங்கோணத்தைக் கொண்டுள்ள ஒரு செங்கோண முக்கோணம் ஆகும்.

✘ C. MNP என்பது ஒரு செங்கோண முக்கோணம் அல்ல.

✘ D. MNP என்பது M இல் செங்கோணத்தைக் கொண்டுள்ள ஒரு செங்கோண முக்கோணம் ஆகும்.

Q.46 பழைய மின் சாதனங்களுக்குப் பதிலாக, ஆற்றல் திறன்மிக்க சாதனங்களை மாற்றிய பிறகு, ஒரு குடும்பம் தன் மாத மின் நுகர்வை 15% குறைத்துள்ளது. இதற்கு முன்பு அது மாதத்திற்கு 400 யூனிட் மின்சாரத்தைப் பயன்படுத்தியிருந்தால், இப்போது அது எத்தனை யூனிட்-களை நுகர்கிறது?

Ans

✘ A. 365

✘ B. 345

✔ C. 340

✘ D. 300

Q.47 E, F, G, H, W, X மற்றும் Y ஆகிய ஏழு நபர்கள் ஒரு வட்ட மேசையைச் சுற்றி, அதன் மையத்தை நோக்கி அமர்ந்துள்ளனர். G என்பவர் F க்கு வலதுபுறத்தில் மூன்றாவது இடத்தில் அமர்ந்துள்ளார். H என்பவர் Y க்கு வலதுபுறத்தில் நான்காவது இடத்தில் அமர்ந்துள்ளார். F இன் இடமிருந்து எண்ணும்போது, F மற்றும் Y க்கு இடையில் இரண்டு நபர்கள் மட்டுமே அமர்ந்துள்ளனர். W என்பவர் H அல்லது F க்கு ஒரு உடனடி அருகாமையாளர் அல்ல. X என்பவர் W இன் ஒரு உடனடி அருகாமையாளர் அல்ல. எனில், E இன் வலதுபுறத்தில் மூன்றாவது இடத்தில் அமர்ந்திருப்பவர் யார்?

Ans
- ✗ A. F
- ✗ B. G
- ✗ C. Y
- ✓ D. X

Q.48 ஆரம் 6 cm மற்றும் உயரம் 14 cm கொண்ட உருளையின் வளைபரப்பைக் (cm^2 இல்) கண்டறியவும். (π = 22/7 ஐப் பயன்படுத்தவும்)

Ans
- ✗ A. 524
- ✓ B. 528
- ✗ C. 522
- ✗ D. 526

Q.49 பின்வருவனவற்றை மதிப்பிடுக.

$$\frac{\sin^2\theta - 2\sin^4\theta}{2\cos^3\theta - \cos\theta}$$

Ans
- ✓ A. tanθsinθ
- ✗ B. cotθsinθ
- ✗ C. cosθcotθ
- ✗ D. tanθsecθ

Q.50 50 cm விட்டம் கொண்ட ஒரு வட்டத்தில், ஒவ்வொன்றும் 14 cm நீளமுள்ள, சமமான இரண்டு இணையான நாண்கள் உள்ளன. அவற்றுக்கு இடையேயான தூரம் y cm எனில், y இன் மதிப்பைக் கண்டறியவும்.

Ans
- ✓ A. 48
- ✗ B. 36
- ✗ C. 24
- ✗ D. 28

Q.51 இதயம் சுருங்கும் போது, தமனிச் சுவர்களின் மீது இரத்தத்தால் செலுத்தப்படும் அழுத்தத்தைக் குறிக்கும் மதிப்பு எது?

Ans
- ✗ A. சராசரி தமனி அழுத்தம்
- ✓ B. சிஸ்டோலிக் அழுத்தம்
- ✗ C. டயஸ்டோலிக் அழுத்தம்
- ✗ D. காற்று அழுத்தம்

Q.52 ஆங்கில அகரவரிசையின் அடிப்படையில், பின்வரும் நான்கு எழுத்து-தொகுப்பு ஜோடிகளில் மூன்று ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் ஒரே போல உள்ளது, இதனால் ஒரு குழுவை உருவாக்குகிறது. எந்த எழுத்து-தொகுப்பு ஜோடி குழுவில் சேராதது ஆகும்?
(குறிப்பு: மாறுபட்ட ஒன்றானது எழுத்து-தொகுப்பில் உள்ள மெய்யெழுத்துக்கள்/உயிரெழுத்துகளின் எண்ணிக்கை அல்லது அவற்றின் நிலை ஆகியவற்றின் அடிப்படையில் இல்லை.)

Ans
- ✗ A. UQ – LH
- ✗ B. EA – VR
- ✗ C. RN – IE
- ✓ D. OK – GB

Black

Q.53 N, Q, V, C, T, G மற்றும் K ஆகிய ஒவ்வொருவருக்கும், திங்கட்கிழமையில் தொடங்கி ஞாயிற்றுக்கிழமையில் முடியும் ஒரே வாரத்தின் வெவ்வேறு நாட்களில் தேர்வு உள்ளது. G என்பவருக்கு வியாழக்கிழமை தேர்வு உள்ளது. V-என்பவருக்கு பிறகு ஐந்து பேருக்கு மட்டுமே தேர்வுகள் உள்ளன. K மற்றும் G-க்கு இடையே ஒருவருக்கு மட்டுமே தேர்வு உள்ளது. Q-என்பவரின் தேர்வானது, G-க்கு முன்பாகவும், ஆனால் C-க்குப் பின்பாகவும் உள்ளது. T-இன் தேர்வானது வெள்ளிக்கிழமை அன்று அல்ல. எனில், K-க்கு உடனடி முன்பாக யாருக்குத் தேர்வு உள்ளது?

Ans
- ✗ A. G
- ✓ B. N
- ✗ C. T
- ✗ D. C

Q.54 CONSULT என்ற வார்த்தையில் உள்ள ஒவ்வொரு எழுத்தும், ஆங்கில அகர வரிசைப்படி மாற்றி அமைக்கப்பட்டால் எத்தனை எழுத்துக்களின் நிலை(கள்) மாறாமல் இருக்கும்?

Ans
- ✗ A. மூன்று
- ✗ B. ஒன்று
- ✗ C. எதுவுமில்லை
- ✓ D. இரண்டு

Q.55 ஒரு மொபைல் பாகங்கள் விற்கும் சில்லறை விற்பனையாளர், சீசன் இறுதி விற்பனையின் போது, விற்கப்படாத சார்ஜர்களின் ஒரு தொகுப்பை விற்றுத் தீர்த்தார். அந்தத் தொகுப்பின் அசல் விலை ₹6,000 ஆகும்; ஆனால் அலமாரியின் இடத்தை காலியாக்குவதற்காக அவை ₹5,700 க்கு விற்கப்பட்டது. சில்லறை விற்பனையாளரின் நஷ்டம் (₹-இல்) எவ்வளவு?

Ans
- ✗ A. 280
- ✗ B. 290
- ✓ C. 300
- ✗ D. 320

Q.56 $12 \sin y + \cos y = \sqrt{8} \sin y$ எனில், எனில், $\tan y$ இன் மதிப்பு என்ன?

Ans
- ✗ A. $\frac{-13 - \sqrt{8}}{136}$
- ✗ B. $\frac{-12 - \sqrt{8}}{141}$
- ✓ C. $\frac{-12 - \sqrt{8}}{136}$
- ✗ D. $\frac{-12 - \sqrt{8}}{146}$

Q.57 பின்வரும் எண்களுள் எது 19 மற்றும் 46 ஆகிய இரண்டு எண்களாலும் மீதியின்றி வகுபடும்?

Ans
- ✗ A. 17039
- ✓ B. 16606
- ✗ C. 17849
- ✗ D. 15005

Q.58 மின்தடை எண் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

Ans
- ✓ A. கொடுக்கப்பட்ட ஒரு வெப்பநிலையில், ஒரு பொருளின் மின்தடை எண் மாறாமல் இருக்கும்
- ✗ B. மின்தடை எண் செலுத்தப்பட்ட மின்னழுத்தத்துடன் மாறுகிறது
- ✗ C. மின்தடை எண் மின்னோட்டத்தைப் பொறுத்து மாறும்
- ✗ D. மின்தடை எண் மின்னோட்டத்தின் அதிர்வெண்ணைப் பொறுத்தது

blackbook

Q.59 ஒரு குறிப்பிட்ட குறியீட்டு மொழியில், '**XJCQ**' என்பது '**108**' என்றும் '**PNST**' என்பது '**78**' என்றும் குறியிடப்பட்டுள்ளது. எனில், கொடுக்கப்பட்ட குறியீட்டு மொழியில், '**OBYN**' க்கான குறியீடு என்ன?

Ans

✗ A. 101

✗ B. 108

✗ C. 110

✓ D. 104

Q.60 ஆங்கில அகரவரிசையின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட வழிமுறையில், **ORVX** என்பது **YBFH** உடன் தொடர்புடையது. அதே வழிமுறையில், **ADHJ** என்பது **KNRT** உடன் தொடர்புடையது. அதே தர்க்கத்தைப் பின்பற்றி, பின்வருவனவற்றில் **JMQS** உடன் தொடர்புடையது எது?

Ans

✗ A. TWZC

✗ B. TVZC

✗ C. TXZB

✓ D. TWAC

Q.61 பின்வரும் எழுத்து மற்றும் சின்னத்தின் வரிசையைப் பார்த்து, பின்வரும் கேள்விக்கு பதிலளிக்கவும். இடமிருந்து வலமாக மட்டுமே எண்ணப்பட வேண்டும்

(இடது) J H # P N @ $ R & Z Ω T £ D V R Y (வலது)

தனக்கு உடனடி முன்னதாக ஒரு சின்னத்தையும், மற்றும் உடனடி பின்னதாக ஒரு மெய்யெழுத்தையும் கொண்டுள்ளவாறு எத்தனை மெய்யெழுத்துகள் உள்ளன?

Ans

✗ A. மூன்று

✗ B. ஒன்று

✓ C. இரண்டு

✗ D. எதுவும் இல்லை

Q.62 ஒரு குழாய் ஒரு தொட்டியை 8 மணி நேரத்தில் நிரப்புகிறது; மற்றொரு குழாய் முழு தொட்டியையும் 16 மணி நேரத்தில் காலி செய்கிறது. தொட்டி ஆரம்பத்தில் காலியாக இருந்து, இரண்டு குழாய்களும் ஒரே நேரத்தில் திறக்கப்பட்டால், தொட்டியின் பாதியை நிரப்ப எவ்வளவு நேரம் (மணிநேரத்தில்) ஆகும்?

Ans

✗ A. 24

✗ B. 16

✗ C. 12

✓ D. 8

Q.63 கொடுக்கப்பட்ட தொடரை தர்க்கரீதியாக முழுமையாக்க பின்வரும் எழுத்து-எண் தொகுப்புகளில் எது கேள்விக்குறிக்கு (?) பதிலாக வரும்?
RGZ 12, VDD 17, ZAH 22, DXL 27, ?

Ans

✗ A. GUQ 32

✓ B. HUP 32

✗ C. HWQ 30

✗ D. GVR 30

Q.64 **20 cm** ஆரம் மற்றும் **7 m** உயரம் கொண்ட ஒரு மர உருளையின் வளைமேற்பரப்பை, ஒரு m^2 க்கு ₹165 என்ற வீதத்தில், மெருகூட்டுவதற்கான மொத்த செலவு (₹ இல்) என்னவாக இருக்கும்?

Ans

✗ A. 1,524

✗ B. 2,145

✗ C. 1,245

✓ D. 1,452

Black Book

Q.65 கொடுக்கப்பட்ட தொடரை தர்க்கரீதியாக முழுமையாக்க பின்வரும் எழுத்து-எண் தொகுப்புகளில் எது கேள்விக்குறிக்கு (?) பதிலாக வரும்?
DFC 11, IKH 18, NPM 25, SUR 32, ?

Ans
- ✗ A. ZWX 38
- ✗ B. VXZ 39
- ✗ C. UXW 38
- ✓ D. XZW 39

Q.66 ஒரு காரின் ரேடியேட்டரில் 84% ஆன்டிஃபிரீஸ் கரைசல் இருக்க வேண்டும். ஒரு வாகன ஓட்டியிடம் 4 லிட்டர் அளவில் 54% ஆன்டிஃபிரீஸ் கரைசல் உள்ளது. எனில், 84% ஆன்டிஃபிரீஸை உருவாக்க, அவர் தனது கரைசலுடன், 95% ஆன்டிஃபிரீஸ் திரவத்தை எத்தனை லிட்டர் சேர்க்க வேண்டும்? (2 தசம இடங்களுக்கு முழுமையாக்கவும்)

Ans
- ✓ A. 10.91
- ✗ B. 14.46
- ✗ C. 16.93
- ✗ D. 6.85

Q.67 ஒரு கார்பன் சேர்மமானது, போதிய அளவு ஆக்ஸிஜனில் முழுமையான எரிதலுக்கு உட்படும் போது, எப்போதும் உருவாகும் வாயு எது?

Ans
- ✗ A. ஆக்ஸிஜன்
- ✗ B. மீத்தேன்
- ✓ C. கார்பன் டை ஆக்சைடு
- ✗ D. கார்பன் மோனாக்சைடு

Q.68 L, M, N, O, G, H மற்றும் I ஆகிய ஒவ்வொருவருக்கும் ஒரே வாரத்தில் திங்கட்கிழமை தொடங்கி ஞாயிற்றுக்கிழமை வரை வெவ்வேறு நாட்களில் இருக்கும் வகையில் தேர்வுகள் உள்ளது. M என்பவருக்கு மட்டுமே N க்கு முன்பாக தேர்வு உள்ளது. L மற்றும் H க்கு இடையில் மூன்று நபர்களுக்கு மட்டுமே தேர்வு உள்ளது. I மற்றும் N க்கு இடையில் மூன்று நபர்களுக்கு மட்டுமே தேர்வு உள்ளது. O என்பவருக்கு H இன் தேர்வு நாளுக்கு முந்தைய ஏதோ ஒரு நாளிலும் மற்றும் G இன் தேர்வு நாளுக்கு பிந்தைய ஏதோ ஒரு நாளில் தேர்வு உள்ளது. L என்பவருக்கு பிறகு எத்தனை நபர்களுக்கு தேர்வு உள்ளது?

Ans
- ✗ A. மூன்று
- ✗ B. இரண்டு
- ✓ C. நான்கு
- ✗ D. ஒன்று

Q.69 PRINTED என்ற வார்த்தையில் உள்ள ஒவ்வொரு உயிரெழுத்தும் ஆங்கில அகர வரிசைப்படி உடனடியாக அதைத் தொடர்ந்து வரும் எழுத்தாக மாற்றப்படுகிறது, மற்றும் ஒவ்வொரு மெய்யெழுத்தும் ஆங்கில அகர வரிசைப்படி அதற்கு உடனடி முன்பாக வரும் எழுத்தாக மாற்றப்படுகிறது. இவ்வாறு உருவாக்கப்பட்ட புதிய எழுத்துக்களின் குழுவில், பின்வரும் எழுத்துக்களில் எது இடதுபுறத்தில் இருந்து மூன்றாவதாக வரும்?

Ans
- ✗ A. M
- ✗ B. S
- ✓ C. J
- ✗ D. F

Q.70 ஒரு குறிப்பிட்ட தர்க்கத்தைப் பின்பற்றி, 4 என்பது 38 உடன் தொடர்புடையது. அதே தர்க்கத்தைப் பின்பற்றி, 9 என்பது 83 உடன் தொடர்புடையது. அதே தர்க்கத்தைப் பின்பற்றி, பின்வருவனவற்றில் 13 என்பது எதனுடன் தொடர்புடையது ஆகும்?
(குறிப்பு: எண்களை அதன் கூறு (constituent) இலக்கங்களாகப் பிரிக்காமல், முழு எண்களில் செயல்பாடுகள் செய்யப்பட வேண்டும். எ.கா. 13. 13 -இல் கூட்டல் / கழித்தல் / பெருக்கல் போன்ற செயல்பாடுகளைச் செய்யலாம். 13 ஐ 1 மற்றும் 3 ஆக பிரித்த பின்னர் 1 மற்றும் 3 இல் கணித செயல்பாடுகளைச் செய்வது அனுமதிக்கப்படாது)

Ans
- ✔ A. 119
- ✘ B. 112
- ✘ C. 115
- ✘ D. 109

Q.71 இந்த கேள்வி கீழே கொடுக்கப்பட்டுள்ள ஐந்து, மூன்று-இலக்க எண்களை அடிப்படையாகக் கொண்டது.

(இடது) 241 826 356 742 961 (வலது)

(எடுத்துக்காட்டு- 697 – முதல் இலக்கம் = 6, இரண்டாவது இலக்கம் = 9 மற்றும் மூன்றாவது இலக்கம் = 7)

இரண்டாவது மிகப்பெரிய எண்ணின் மூன்றாவது இலக்கத்தை இரண்டாவது மிகச்சிறிய எண்ணின் மூன்றாவது இலக்கத்துடன் பெருக்கினால் கிடைப்பது என்ன?

Ans
- ✘ A. 56
- ✘ B. 18
- ✘ C. 9
- ✔ D. 36

Q.72 பின்வரும் எழுத்து, சின்னத்தின் வரிசையைப் பார்த்து, கேள்விக்கு பதிலளிக்கவும். இடமிருந்து வலமாக மட்டுமே எண்ணப்பட வேண்டும்.
(இடது) # V $ A U % * € V S C & O X & Z * % @ @ F I (வலது)
தனக்கு உடனடி முன்பாக ஒரு எழுத்தையும் மற்றும் உடனடி பின்பாக ஒரு சின்னத்தையும் கொண்டுள்ளவாறு எத்தனை எழுத்துக்கள் உள்ளன?

Ans
- ✘ A. 4
- ✘ B. 8
- ✘ C. 5
- ✔ D. 3

Q.73 ஒரு இயந்திரத்தின் அசல் விலை ₹25,000 ஆகும். அதன் தேய்மான விகிதம் ஆண்டுக்கு 4% எனில், இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அந்த இயந்திரத்தின் மதிப்பைக் கண்டறியவும்.

Ans
- ✘ A. ₹23,400
- ✔ B. ₹23,040
- ✘ C. ₹24,040
- ✘ D. ₹24,400

Q.74 5287463 என்ற எண்ணில் உள்ள ஒவ்வொரு இரட்டைப்படை இலக்கத்துடனும் 1 கூட்டப்பட்டு மற்றும் ஒவ்வொரு ஒற்றைப்படை இலக்கத்துடனும் 1 கூட்டப்படுகிறது எனில், இவ்வாறு உருவாக்கப்பட்ட புதிய எண்ணில் உள்ள அனைத்து ஒற்றைப்படை இலக்கங்களின் கூட்டுத்தொகை என்னவாக இருக்கும்?

Ans
- ✘ A. 26
- ✘ B. 22
- ✘ C. 20
- ✔ D. 24

Black book

Q.75 **Below are given two sets of numbers. In each set of numbers, a certain mathematical operation on the first number results in the second number. Similarly, certain mathematical operations on the second number results in the third number and so on. Which of the given options follows the same set of operations as in question?**
(NOTE – A two/three digit number cannot be broken into individual digits for operations e.g. if 37 is followed by 10, the operation cannot be 3+7 as a two digit number cannot be broken into individual digits)
3 – 12 – 24 – 36 ; 5 – 20 – 40 – 52

Ans

✗ A. 7 – 28 – 54 – 66

✗ B. 8 – 32 – 64 – 74

✓ C. 4 – 16 – 32 – 44

✗ D. 6 – 30 – 60 – 72

"

Blackbook